716

Reg. No. M. 1482.

ஸமரஸ போதினி.

"The Samarasabodhini"-A Tamil Weekly

"தேரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

E. சூரியநாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர். E. Suryanarayana Aiyar B. A., B. L., Editor

புத்தகம் 1. | ரௌத்திரி௵ ஆடி௴ 20௳ புதன்கிழமை 4th August 1920. தஞ்சாவூர். | பிரதி 8.

ஸமர·ஸ போதினி.

இஃதொரு தமிழ் வாரப்பத்திரிகை. புதன்கிழமை தோறும் தஞ்சையினின்றும் வெளிவருவது. இந்தியர்கள் பிரிட்டிஷாரைப்போல சுதந்தரமும் பூரணசுய ஆட்சியும் பெற்று உலகத்தார் கண் முன்பு சுகமாகவும் தைரியமாகவும் வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் காங்கிரஸை முழுமனதுடன் ஆதரிப்பதாகும். அரசியல். கல்வி, விவசாயம், தொழில், வியாபாரம், தொழிலாளர் இயக்கம் முதலிய விஷயங்கள் இப்பத்திரிகையில் நன்கு விவரிக்கப்படும். எளியவர்களும் இதை வாங்கிப் படிக்கவேண்டி இதன் சந்தாவைக் குறைத்து வைத்திருக்கிறோம்.

சந்தா விவரம்:-

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு	ரூ.	5—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ.	3—0—0
பினங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு	ரூ.	7—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ.	4—0—0

விளம்பர விகிதம்:-

பத்தி 1க்கு மாதம் 1க்கு	ரூ.	20—0—0
4 insertions per month per column	Rs.	20—0—0

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் மிகவும் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

விஷயதானம் :- செய்பவர்கள் நல்ல வியாசங்களை ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை இவ்விடம் வந்து சேரும்படி எழுதி அனுப்பவேண்டும். எழுதுவோர் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தனித்தனி எழுத்தாக எழுதி அனுப்பவேண்டும்.

நல்ல வியாஸங்கள் எழுதுவோருக்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். முழு விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

நாணயமும் நயமுமான

இடம்

ஒரு தடவை பரீக்ஷை செய்து பாருங்கள்.

ஓரியண்டல் வேர்ஹவுஸ் தஞ்சாவூர்

பட்டு அங்கவஸ்திரங்கள்.

பிரதிதினமும் தோய்க்கக் கூடியதும் நெடுநாள் உழைக்கக்கூடியதும் மிக அழுத்தமுமானது, முந்தாணை குஞ்சம் கட்டின பட்டு அங்கவஸ்திரங்கள். வெண்மை, சந்தனகலர், கோல்டு கலர், மேகவர்ணம், பச்சை, நீலம், ஆகாயம், சிவப்பு, ரோஸ், முதலான பல கலர்களில் கிடைக்கும். இவைகள் அங்கவஸ்திரங்களாகவும், டர்பனாகவும், உபயோகித்துக் கொள்ளலாம். விலை சரஸம்.

சாதா சேலைகள்.

காப்பிகலர் கோக்கோ கலர், டீக்கலர், காங்கு கலர்களில் ஒம்ரூல் சேலைகள், பூனமுந்தி சேலைகள், பிரதிதினமும் தோய்த்து உடுக்கக் கூடியது. நெடுநாள் உழைக்கக் கூடியது. கெட்டி சாயமுள்ளது.

ஜம்க்காளங்கள்.

சர்கூட் ஜம்க்காளங்கள் இங்கிலீஷ் பாட்டரன் கண்களை கவறக்கூடியது. மிக அழுத்தமானது.

பிடிக்காத தினுசுகள் வாபீஸ் பெற்றுக்கொண்டு வேறு தினுசுகள் அனுப்பிக் கொடுக்கப்படும். ஆகவே நேரில் பார்த்து வாங்க வில்லையென்ற எண்ணம் வேண்டாம்.

"வைசிய மித்திரன்."

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல்ஸைஸில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக் குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாய நுட்பம், விநோதக் குறிப்பு, அன்னிய வர்த்தமானம், பொது வர்த்தமானம், இராஜாங்க சமாச்சாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளி வருகிறது. இந்திய மக்களுக்குப் "புதிய ஊக்கமும், செல்வப்பெருக்கம் வளருமாறு, பற்பல ஆராய்ச்சி வியாசங்கள், ராஜதந்திர நுட்பங்கள்" இவற்றை வெகு அழகாக எடுத்துப் போதித்து வருகின்ற இப்பத்திரிகையானது ஒவ்வொரு தமிழராலும் படிக்கத்தக்கதெனப் பல பத்திரிகைகளாலும் புகழப்படுகின்றது. இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5-0-0 (ரூபாய் ஐந்தே) வெளி நாடுகளுக்கு ரூபாய் 6-0-0.

மானேஜர்,
"வைசிய மித்திரன்" காரைக்குடி.

"The Young India."

A high class English weekly edited by Mahatma Ghandi. Only Rupees four per year. Oh! Sons & Daughters of Ind! Subscribe by thousands. In helping it you help yourselves.

The Manager,
Young India.
Ahmedabad.

தேவை.

சந்தாதாரர்களைச் சேர்க்கவும் விளம்பரங்களைச் சேகரிக்கவும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மாஜேனர்,
ஸமரஸ போதினி ஆபீஸ்,
தஞ்சாவூர்.

Kerosine Gas Stoves.

கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

கோரனஸ்ட்வ் நே. 5. ரூ. 14-0-0.

ஸன் கம்பெனி,
தஞ்சாவூர்

பெரியாரின் ஜீவிய சரிதம்.

திலகர் பெருமான்

XIV திலகரின் சாதுர்யம்.

(சென்ற வார போதினியின் 11-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது சார்பில் சாய் மஹாராஜா விசாரணை முடிவடைநததும், போதிய கவனக்குறைவால் சீர்குலைந்து சின்னாபின்னமாய்க் கிடந்த இயக்கங்களைத் திலகர்பிரான் ஒழுங்கு செய்யத் தலைப்பட்டனர்; கேசரி பத்திரிகையின் சந்தாதார்கள் தொகை அளவுமிஞ்சி யதிகரித்தமையால் அப்பத்திரிகையைப் பதிப்பிக்கும் பொருட்டுப் பிரமாண்டமான அச்சியந்திரம் இன்றியமையாததாயிற்று. அஃதன்றியும் தம்மிரு பத்திரிகைகளையுஞ் சரிவர நடத்துவதற்கு உத்தியோக சாலையொன்றும், கேசரி, மராட்டா அச்சுக்கூடங்களை நிரந்தரமாய்த் தாபிப்பதற்கோர் விசாலமான இடமும் திலகருக்குத் தேவையா யிருந்தன.

இத்தருவாயில், பரோடா மஹாராஜா பூனாவில் தமக்குச் சொந்தமான கெயிக்வாடாவைத் திலகர் பெருமானிடம் மிகக் குறைந்த விலைக்கு விற்றனர். அரண்மனை யொத்த அந்தப் பெரிய மாளிகையில் திலகர் அச்சுக்கூடங்களை நிர்மாணஞ் செய்தது மன்றிப் பத்திரிகை சாலையையும் அவ்விடமே யேற்படுத்திக் கொண்டார்.

மேலும், பத்திரிகைகளை விரைவிலச்சடிக்க அதற்கு வேண்டிய வசதிகளைத் தம்கூரிய புத்தியால் சேகரிக்கலாயினர். அச்சியந்திரத்தில், ஒவ்வொரு எழுத்தாய்ச் சேர்ப்பதற்குப்பதிலாய்த்தேவ நாகரி வாக்கியங்களைத் தொடர் தொடரா இணைக்குமாறு, மராத்தி மொழியின் அடையாளங்களைச் சிறிது உருவமாற்றி பார்க்கும்படி அச்சு வேலைக்காரர்களுக்குத் தாவளித்தார். நவீன முறையில் அமைக்கப்பட்ட யந்திரத்தில் கேசரி பத்திரிகையை அச்சிட வாரம்பித்தார். இங்கிலாந்தில் வார்ப்புத் தொழிலாளர் யாவரும் திலகரின் நுட்பமான அறிவை மெச்சினர்கள். திலகர் பெருமானது ஆற்றலை யாரால் அளவிட முடியும்? அதிகாரிகள் இப்பெரியாரிடம் அச்சமுறுவதற்கு இதுவன்றோ காரணம்?

1904-ம் ஆண்டு பம்பாயில் கூடிய காங்கிரஸில் திலகர்பிரான், இந்தியப் பிரதிநிதிகளிற சிலர் இங்கிலாந்து சென்று இங்குள்ள குறைகளை ஆங்கிலருக் கெடுத்துரைக்க வேண்டுமென்னுந் தீர்மானத்தை யாமோதித்தனர்.

XV திலகரும் வங்காளப் பிரிவினையும்

இந்தியாவில் அரசாங்கம் எளிதில் நடைபெறுமாறு ஆங்கில வாசியல் நிபுணர்கள் நமது தேசத்தைப் பல மாகாணங்களாக வகுத்திருக்கின்றனர். அவற்றுள் வங்காளம், பம்பாய், சென்னை முதலியன முக்கியமானவை. வங்காள மாகாணத்தில் இந்துக்களும் மகம்மதியர்களும் மற்றச் சாதியினரும் அநேக நூற்றாண்டுகளாய் ஒற்றுமையோடும் நேச பாவத்தோடும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் யாவரும் ஒரே வித நடையுடை பாவனைகளையும் பாஷையையுங் கைக்கொண்டதன் பயனாக, ஒரேவித உணர்ச்சி பெருகலாயிற்று. பாரத நாட்டில் 1905-ம் வருடம் அரசர் பெருமானின் பிரதிநிதியாய் விளங்கிய கர்ஸன் பிரபு இதையறிந்து இத்தகைய வுணர்ச்சி வுளர்ந்தோங்கின், அதிகார வர்க்கத்தாருடைய ஆட்சி முறைக்குக் கெடுதலுண்டாகு மென்றெண்ணி, வங்காளத்தை இருபாகமாகப் பிரித்தார். ஒவ்வொரு பிளவிலும் தனித் தனி மாகாண வதிகாரிகளை நியமித்தார். வேறு வேறு நீதிமன்றங்களையும் சட்ட நிர்வாக சபைகளையும் ஏற்படுத்தினர் இந்து மகம்மதிய வொற்றுமை குன்றும் பொருட்டுச் சூழ்ச்சிகள் செய்யலாயினர்.

இக்கொடுஞ் சட்டத்தை வங்காளத்திலுள்ளோர் பலமாகக் கண்டித்தார்கள். கடவுளால் ஒன்றெனப் படைக்கப்பட்ட வங்காள சமூகத்தைக் கர்ஸனெனும் மானிடன் பிளவு செய்யவும் நேரிட்டதா வென்றுள்ளங் கொதித்தார்கள்; இந்தியா மந்திரிக்கும் கர்ஸன் துரைக்கும் ஏனையவதிகாரிகளுக்கும் இவ்வேற்பாட்டை நீக்குமாறு விண்ணப்பஞ் செய்து கொண்டார்கள்; எண்ணிறந்த பொதுக் கூட்டங்கள் கூட்டினர்கள். தீர்மானங்கள் தயாரித்தனுப்பினர்கள். வியாசங்களைப் பத்திரிகைகளில் வரைந்தார்கள். யாது செய்தும் பயன்படவில்லை. ஆகவே, வங்காளம் மறுபடியும் ஒன்று சேர்க்கப்படும் வரை கிளர்ச்சியை நிறுத்துவதில்லையென வங்காளியர்கள் அவ்வாண்டு ஆகஸ்டு மாதம் ஏழாம் நாள் கல்கத்தா காளியம்மன் கோவிலெதிரில் சுரேந்திரநாத் பானர்ஜியின் தலைமையின்கீழ் சபதங்கூறினர். நாடெங்குமோர் புதிய வுணர்ச்சி பரவியது.

திலகர் பெருமான், இந்திய சுய ஆட்சிக் கிளர்ச்சியைத் தீவிரமாய்த் தொடங்குவதற்குத் தக்க தருணமிதுவேயென நிர்ணயித்தார். நாவன்மை நிறைந்த பிரசங்கங்களினாலும் மரியாதை சொற்களடங்கிய தீர்மானங்களினாலும் அதிகார வர்க்கத்தினரின் தயவை நாடி நிற்பதாலும் பாரதநாடு சுய நிர்ணயம் பெறுதெனவறிந்தார், அரசியற் கிளர்ச்சியில் வேறு சில உபாயங்களைப் பிரயோகிக்க வேண்டுமெனக் கருதி அதற்குரிய துறைகளை யனுசரிக்கலாயினர்.

இங்கிலாந்து மேன்மையுற்றதற்குக் காரணம் அந்நாட்டின் வியாபாரமென்று திலகர் நன்குணர்ந்து, ஆங்கில தேயத்தினின்றும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருஞ் சாமான்களை இந்தியர்கள் வாங்க மறுத்தால் அரசாங்க வர்க்கத்தினர் தமது வேண்டுகோளுக்கிணங்குவார்களெனத் தமது பத்திரிகையில் வற்புறுத்தி வந்தார். மிருக சக்தியாலுண்டான கொடிய சட்டங்களைப் பாரத நாட்டினர் ஆத்ம சக்தியெனும் ஆயுதந்தாங்கி எதிற்கு மாறு உபதேசித்தார். ஊர்கடோறுஞ் சென்று சுதந்தர வாஞ்சையை நிலை நாட்டும்படி மிகவும் மன்றாடினர். தேசாபிமானிகள் யாவரும் சுதேசிய விரதத்தைச் கைக்கொண்டு ஆங்கிலச் சாமான்களை எவ்விதத்திலும் விலக்க வேண்டுமெனவும், ஆங்கிலப் பள்ளிக்கூடங்களுக்குத் தங்கள் குழந்தைகளை யனுப்பலாகாதெனவும் சமயம் நேர்ந்த காலத்து உத்தியோகங்களைத் துறப்பதற்கும் அரசாங்க வரியைக் கொடுக்க மறுப்பதற்கும் தாயராக வேண்டுமெனவும் பிரதிதினமும் பிரசங்கங்கள் செய்து வந்தார்.

பூனா, பம்பாய், நாஸிக், ஷோலாப்பூர், ஆமத் நகர், ரத்னகிரி, கல்யான், சதாரா, காசி, கல்கத்தா முதலிய நகரங்களுக்குத் திலகர் நேரிற்சென்று ஆங்காங்கு சுதேசியக் கொள்கைகள் வேரூன்றுமாறு பிரசார வேலை தொடங்கினர். கெல்கர், பராஞ்சிபே, கடில்கர், மூன்ஜிபோன்ற தமது சீடர்களைப் பிற ஊர்களுக்குப்போய் தேசிய ஊக்கத்தைப் புகட்டுமாறு தூண்டினர்.

1905-ம் வருடம் டிஸம்பர் மாதக் கடைசியில் காசிமா நகரத்தில் காங்கிரஸ் சபை கூடியது. அளவற்ற பிரதிநிதிகள் பிரசந்நமா யிருந்தனர். வங்காளியர்கள் பகிஷ்கார முறையை யனுஷ்டித்தது நியாயமென்றும் பகிஷ்கார முறை சட்ட விரோதமல்லவென்றும் காங்கிரஸில் தீர்மானிக்கப்பட்டது. அவ்வமயம் திலகர் பெருமான் பஞ்சமும் வறுமையுங் குடிகொண்ட இந்திய நாட்டில் அதிகாரிகள் தகுந்த பரிகாரங்களைத் தேட வேணடுமெனவும் நிலவரியைக் குறைக்க வேண்டுமெனவுங் குறிப்பிட்ட தீர்மானத்தைப் பிரேரேபித்து வெகு அழகாய்ப் பேசினர். சுகாதார வசதிகள் சரிவர கவனிக்கப்படவில்லை யென்றும் உள் நாட்டுப் பொருள்களை வெளி நாடுகளுக்கேற்றுமதி செய்யக் கூடாதென்றும் விளையாத நிலங்களுக்குத் தீர்வை வசூலிக்கலாகாதென்றும் சர்க்கரைப பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல இந்திய சிகாமணிகள் வீற்றிருந்த காங்கிரஸ் பந்தலில் பிரசங்க மாரி பொழிந்தார்.

XVI திலகர் பிரானும் தேசீயக் கிளர்ச்சியும்.

1906-ம் ஆண்டு முதன் முதலில் காங்கிரஸ் பிரதிநிதிகளுள், மிதவாதிகளெனவும் தேசீய வாதிகளெனவும் இருகட்சிகள் தோன்றின. அதிகார வர்க்கத்தினரின் தயவை எதிர்பார்த்து அவர்மனங் கோணாது நடப்போர் மிதவாதிகளெனப்படுவர். இவர்கள் சொற்றிறம் நிரம்பிய பசினாலும் கண்டனக் கூட்டங்களினாலு வணக்கம் பொருந்திய விண்ணப்பங்களினாலும் இந்திய அரசியற் குறைகளைத் தவிர்க்கலாமெனும் கொள்கையுடையவர்கள். இந்தியர்கள் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சுய ஆட்சி பெறவேண்டுமே யொழியத் திடீரென முழு சுய ஆட்சியடைவதற்குத் தகுதியற்றவர்களெனும் உறுதி கொண்டவர்கள்.

(11ம் பக்கம் பார்க்க.)

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாத் தொகைகளைக்காலதாமதமன்னியில் அனுப்பித்தரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

(ப-ர்.)

ஸமரஸபோதினி, தஞ்சாவூர்.



"Be just and fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's & Truth's"

ரௌத்திரி௵ ஆடி௴ உ௰உ புதன்கிழமை.

4th AUGUST 1920.

திலகர் பெருமான் தேகவியோகமடைந்தார்.

லோகமான்ய திலகர் பம்பாய் நகரில் சென்ற மாதம் 31ந்தேதி இரவு 12-45 மணிக்குத் தேகவியோகமடைந்தாரென்னும் சமாசாரம் இவ்வூர் வாசிகளின் காதில் ஆகஸ்ட் 2ந்தேதி காலை 8 மணிக்கு விழுந்தவுடன், ஜனங்களெல்லோரும் துக்கசாகரத்தில் மூழ்கிவிட்டார்கள். பிரக்ஞை இல்லாமல் அநேகம் பேர்கள் கீழே விழுந்துவிட்டார்கள். வியாபாரிகள் தத்தம் கடைகளைச் சாத்திவிட்டு வீடு சென்றார்கள். வீதிகளின் வழியாகச் சென்றுகொண்டிருந்தவர்கள் ஆங்காங்கே நின்றுவிட்டார்கள். வண்டிகளை ஓட்டிக்கொண்டு போன வண்டிக்காரர்கள் இரண்டு நிமிஷம் வண்டிகளை ஓட்டாமல் பிரமித்து வண்டியை நிறுத்திவிட்டார்கள்.

பள்ளிக்கூடங்களுக்குப் போய்க்கொண்டிருந்த பிள்ளைகளெல்லாம் எங்கெங்கு ஸமாசாரத்தைக் கேட்டார்களோ அங்கங்கே இன்னது செய்வதென்று தெரியாமல் நின்றுவிட்டார்கள். மார்க்கட்டுக்குப் போய்க்கொண்டிருந்த பெண்டுகளெல்லோரும் கண்ணும் கண்ணீருமாகப் புலம்பினார்கள். தஞ்சைமா நகரிலுள்ள அறுபதினாயிரம் ஜனங்களும் மனோ தைரியத்தை இழந்தவர்களாய் தாயைப் பறிகொடுத்த குழந்தையைப் போல் கதறினார்களென்று கூறுவது மிகையாகாது. தஞ்சையிலிப்படியிருந்தால், திலகர்பெருமான் இறந்த விடமாகிய பம்பாயில் எப்படி இருந்திருக்குமென்பதை நேயர்களே ஊகித்துக்கொள்ளலாம். லட்சக்கணக்கான ஜனங்களும், அம்மகானின் சிஷ்யர்களும், பக்தர்களும், இந்த மகா துக்கத்தை எவ்விதம் சகிப்பார்களோ? நாம் அறியோம். திலகர் பெருமானின் ஜன்மபூமியாகிய மஹாராஷ்டிரம் மாத்திரமல்ல; இந்தியா முழுவதுமல்ல, உலகம் முழுவதுமே திலகரது பிரிவால் ஈடுசெய்ய முடியாத பெரும் நஷ்டத்தை அடைந்திருக்கிறதென்றே சொல்லலாம். ஏன்?

அஃதென்னவென்றால் காலம் சென்ற திலகர் இவ்வுலகத்திற்கே ஒரு திலகம் போல விளங்கினார். அவர் ஓர் அவதார புருஷர்; பாமர ஜனங்களுக்குத் தமது தாய் நாட்டின் மகிமையை எடுத்து புகட்டுவதற்காக அவதரித்தவர்; அவர்களுக்குத் தாய் பாஷையின் மூலமாய் ராஜரீக அறிவூட்டினவர்; சுதேசியம் இன்னதென்பதை அனுஷ்டானத்தில் விளக்கிக் காட்டினவர்; ஒற்றுமையில்லாத ஜனங்களுள் ஒற்றுமையை உண்டுபண்ணினவர்; மஹாராஷ்டிரத்தில் ஒற்றுமையை உறுதிப்படுத்திக்காட்டினவர்; உலகத்தாருக்கு மஹாராஷ்டிரர்களிடத்தில் மதிப்பு உண்டாகும்படி செய்தவர்; கட்டுப்பாடு என்றால் இன்னதென்றும், தலைவர் என்றால் இன்னாரென்றும், அவரைப்பின் பற்றுபவர்கள் இவ்வாறிருக்கவேண்டுமென்றும் உலகத்தார் அறியுமாறு செய்தவர்; அதிகார வர்க்கத்தினர்களிடத்தில் யாதொரு தயையும் எதிர்பாராதவர்; அவர்களிடத்தில் பயமன்றிப் பேசினவர்; அவர்களின் கோபத்திற்குப் பயப்படாதவர்; சுய நலத்தைப் பாராட்டாதவர்; ஸத்தியத்தைக் கடைப்பிடித்து நடந்தவர்; உள்ளதை உள்ளபடி உரைத்தவர்; தம்மனசாட்சிக்கு விரோதமின்றி நடந்தவர்; ஏழைகளைச் சமமாகப் பாவித்தவர்; ஏழைகளின் கஷ்டங்களை உணர்ந்தவர், ஏழைகளுக்காக உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் தத்தம் செய்தவர்; தமக்காகப் பொருளை சம்பாதிக்காதவர்; லட்சக்கணக்கான ஜனங்களினால் கொடுக்கப்பட்ட லட்சோப லட்ச ரூபாய்களை ஜனங்களின் நன்மைக்காகவே செலவழித்தவர்; பட்டங்களுக்காசைப்படாதவர்; பிறருடைய நன்மைக்காக் கஷ்டப்பட்டவர்; தேசத்தின் க்ஷேமத்திற்காகப் பல தடவை சிறை புகுந்தவர்; தேச சேவையிலேயே கண்ணும் கருத்துமுடையவர்; பாரதமாதாவின் சேவைக்காகவே பிறந்தவர்; ஆசார சீலர்; தெய்வ பக்தியுடையவர்; அகம்பாவமற்றவர்; தன்னை மறந்தவர்; சமதிருஷ்டியுள்ளவர்; சகலருக்கும் ஊழியராகவிருந்த புண்ணிய புருஷராகிய திலகரை விட்டுப்பிரிந்த இந்தியர்கள் "நாங்கள் இனிஉலகில் இருக்கமாட்டோம். இதோ எங்கள் உயிரையும்விட்டு விடுகிறோம்." என்று விம்மிவிம்மி அழுதுக்கொண்டும் இங்குமங்குமாக ஓடிக்கொண்டும்இனி "நாம் இம்மகானைப்பார்க்கப் போகிறோமா? இல்லையே? இவரைப்போல ஒரு தலைவர் நமக்குக் கிடைக்கப்போகிறாரா? கிடைத்தாலும் இவரைப்போல நமக்காக உழைக்கமாட்டார்" என்றுசொல்லிக்கொண்டே கதறுகிறார்கள்.

பாரத நாடு படும் பெரிய கஷ்டங்களை நிவர்த்தி பண்ணுவதற்காகவே அவதரித்த மகானல்லவா இவர்? இவர் சென்ற 40 வருஷங்களாகத் தேசத்தின் முன்னேற்றத்திற்காகச் செய்திருக்கும் பரித்தியாகங்களை எவர்தான் கணக்கிட்டுச்சொல்ல முடியும்? ஆதியந்தமில்லாத மகா வேதங்களையெல்லாம் அத்தியயனம் செய்து, அவைகளுள் அடங்கியிருக்கும் அரிய விஷயங்களையெல்லாம் ஆராய்ந்து உலகத்தார் அறியுமாறு செய்த மகாமேதாவியல்லவா? திலகர். இப்பெரியாரின் கணித சாஸ்திர ஞானத்தை மெச்சாதவர் எவருமிலர்! மேல் நாட்டிலுள்ள எல்லாதத்த்வ ஞானிகளும் சாஸ்திர ஆராய்ச்சி செய்வோரும் இவர் கல்வித் திறமையைக்கொண்டாடிப் புகழ்ந்திருக்கின்றார்கள். இம்மகானின் அரசியல் ஞானத்திற்கு ஈடு எங்கும் கிடையாது. இவரது வாக்கு சாதுரியமும் ஜனங்களைக் கைவசப்படுத்தும் சக்தியும் வேறொருவரிடத்திலும் காணமுடியாது. இவ்வருமை குணங்களெல்லாம் பொருந்திய மகான் போய்விட்டாரே என்று எல்லா ஜாதியினர்களும் விசனப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

"பெரியவர் போய்விட்டாரே! புலவர் பிரிந்துவிட்டாரே! தலைவர் நீங்கிவிட்டாரே! ஆரியமாதாவின் சிரேஷ்ட ஸத்புத்திரர் போய்விட்டாரே! முடிசூடாமன்னர் கைவிட்டுவிட்டாரே! மகாதீரர் மறைந்துவிட்டாரே! தேசபக்தர் தேகவியோகம் புரிந்தாரே! எல்லாம் அறிந்தவர் எங்கேயோ போய்விட்டாரே! ஹே! ஈசா! பூமிக்குப் பாரமாய் நாமிருப்பதேன்?" என்று ஜனங்கள் கூறும் வார்த்தைகள் காதில் விழுவதைக் கேட்க மனம் பதறுகின்றது. ஐயோ! என் செய்வோம்? எங்குப் போவோம்! இவரை எங்குக்காண்போம்! தைரியத்தில் ஹிமவானுக்கு ஒப்பானவரை, பக்தியில்நாரதமகரிஷிக்குச் சமானமானவரை, ஸத்தியத்தில் ஹரிச்சந்திர ராஜனுக்கு இணையானவரை, எப்பொழுது காண்போம்.? இவர் ராஜ தந்திரத்தில் சாணிக்கியருக்குச் சமமன்றோ? மனோ தைரியத்திலும் தீர்க்க திருஷ்டியிலும் துரோணர், பீஷ்மரைப்போல விளங்கினவரன்றோ? இப்புருஷோத்தமரைப்போல இனி உலகில் எவரேனும் அவதரிக்கப்போகின்றனரோ? இல்லை, இல்லை, என்றுஜனங்கள் புரண்டு கதறுகிறார்கள்.

சகோதரர்களே! ஆரிய புத்திரர்களே! முஸ்லிம் நண்பர்களே! அதைரியப்படாதேயுங்கள்! எல்லாம் வல்ல ஆண்டவன்நம்மை ரட்சிப்பாரென்னும் உறுதியை மறவாதேயுங்கள்! லோகமான்ய திலகர் தேகவியோகம் செய்தபோதிலும் அவர் நம்முடன்

தானிருக்கிறார். நம் நாட்டின் முன்னேற்றத்தை அவரது ஆத்மா கவனித்துவரும் என்பது திண்ணம். அவர் நமக்குப் புகட்டியிருக்கும் தேசபக்தியைக்கொண்டு நாம் கரையேறலாம். அவர் தமது நூல்களிலும் பிரசங்கங்களிலும் சொல்லியிருக்கும் புத்திமதிகளைப் பின்பற்றுங்கள். அவ்வரிய மொழிகள் நம்மெல்லோருக்கும் வழிகாட்டியாக நிற்கும். இது நிச்சயம். இதை நம்புங்கள். அம்மகான் எங்கும் வியாபித்திருப்பதாகவே நினைத்துக்கொள்ளுங்கள். ஒவ்வோர் இந்தியரின் ஹிருதயத்தில் குடிகொண்டிருக்கிறார் என்று உறுதிகொள்ளுங்கள். அப்புண்ணிய புருஷரை எப்பொழுதும் தியானம் செய்யுங்கள். அவர் படத்தை வைத்துப் பூஜை செய்யுங்கள். அப்புருஷோத்தமரின் ஞாபகம் என்றைக்குமிருக்குமாறு உருவப்படங்கள் ஏற்படுத்துங்கள். அவரை மறவாமலிருங்கள். அவர் கொள்கைகளை அனுஷ்டியுங்கள். அவர் ஆரம்பித்த காரியத்தை விடாமுயற்சியுடன் செய்துவாருங்கள். முப்பத்துமூக்கோடி ஜனங்களின் உள்ளத்திலிருந்துகொண்டு நமக்குத் தைரியத்தை அளிப்பாரென்பதில் சந்தேகமில்லை. அதைரியப்படவேண்டாம். நினைத்த காரியம் சீக்கிரம் கைகூடும். கண்விழித்துக்கொள்ளுங்கள். அவர் விட்ட காரியத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். பின்னேக்கமன்றி முன் செல்லுங்கள். கர்ம யோகத்தின் தத்துவத்தை அறிந்து கர்ம யோகியாகிய திலகர் பெருமானின் அடிகளைபின்பற்றுங்கள்.

திலகர் பிரான் கர்மயோகமே மேலானதென்னும் கொள்கையை அனுஷ்டித்துவந்த மகான். அவர் தமக்காகவும் தம்குடும்பினருக்காவும் ஒன்றும் செய்யாமல் தம் தாய்நாட்டின் க்ஷேமத்திற்காகவே தாம் செய்த ஒவ்வொரு கர்மாவையும் அர்ப்பணம்செய்தார்? தம் வார்த்தைகளினாலும், தம் செய்கையினாலும், தம் நடத்தையினாலும் இந்திய மாதாவின் சேவையைக் காட்டிலும் வேறு சேவையில்லை என்பதை விளக்கிக் காட்டினார்; தாமெடுத்துக்கொண்ட காரியம் பூர்த்தியாகா விடினும் தாம்மறுபடியும் அவதரித்து ஸத்தியமும் நியாயமும் உலகில் என்றைக்கும் விளங்குமாறு செய்வதுதான் தமது கடமையாகும் என்று சொல்லி, பகவத் கீதை 4 வது அதிகாரம் 7 வது சுலோகத்தை எல்லோரும் கேட்குமாறு சொல்லி தம் உயிரைவிட்டுப் பரமபதமடைந்தார். இவ்வரிய கடைசி வாக்கை பாரத நாட்டு ஸ்திரி புருஷர்கள் மனதிலிருத்தி நமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்குரிய சேவைகளையும், பரித்தியாகங்களையும் செய்வார்களாக.

இடைநிலை விளக்கு.

பறந்தோடி விட்டது,

இனி பிரிட்டிஷ் அதிகாரிகள் இந்தியர்களைப் பயமுறுத்தியாளும் காலம் பறந்தோடி விட்டதென்பதைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் பிரிட்டிஷ் குடிமக்களும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தியாவிலுள்ள பத்து கிறிஸ்தவப் பாதிரிமார்கள் லண்டனில் பிரசுரமாகும் "வெஸ்ட்மின்ஸ்டர்" என்னும் பத்திரிகைக்கு ஒரு கண்டிப்பான வியாசம் எழுதியிருக்கிறார்கள். இவர்கள் கூறுவது சரியானதென்பது நமது அபிப்பிராயம். ஆனால், இந்தியாவின் உப்பைத் தின்னுவிட்டுக் கொழுத்துத் திரியும் ஆங்கிலோ இந்தியர்கள் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் இராணுவ பலத்தைப் பின்பற்றி நிற்கிறதென்று பறையடிக்கிறார்கள். இவர்களுடைய துஷ்ட யோசனையைக் கேட்கக்கூடாதென்று மேற் குறிப்பிட்ட கிறிஸ்தவப் பாதிரிமார்களும் இன்னும் பல உத்தம ஆங்கிலேயர்களும் அடிக்கடி பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு எச்சரிக்கை செய்து வந்திருக்கிறார்கள். சமீபத்தில் ஸர் ஆர்ச்டேல் எர்ல் என்பவர் லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகைக்கு ஒரு வியாசமெழுதி, அதில் பிரிட்டிஷ் நியாயமும் பிரிட்டிஷ் தருமமும் தான் இந்தியர்களை வசப்படுத்தி வந்தனவென்றும் இனி அவ்விரண்டுமுறைகளினால்தான் இந்தியாவைப்பிரிட்டிஷார் ஆள முடியுமென்றும் வற்புறுத்தியிருக்கிறார். பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் ஸர் ஆர்ச்டேல் எர்ல் கூறியதை என்றுதான் உணர்வார்களோ?

அரிய புத்திமதிகள்.

சென்னைப் பச்சையப்பன் கலாசாலை பிரின்ஸிபால் மிஸ்டர் ஸி. எல். ரென் என்பவர் சென்னைக்கு வந்து சில வாரங்களேயாயின. இவர் சமீபத்தில் பெரம்பூர் கண்ணன் செட்டியார் பாடசாலையில் பிரசங்கம் செய்ய நேர்ந்தபோது, மாணவர்களுக்கும் பெரியவர்களுக்கும் சில அரிய புத்திமதிகளை வெளியிட்டார். மாணவர்களின் படிப்பின் முக்கிய நோக்கம் அவர்கள் தாங்களே யோசித்துக் காரியங்கள் செய்யக்கூடியதா யிருக்க வேண்டுமென்றும், அது மாணவர்களுக்குள் சிநேகபாவத்தைக் கொடுக்கக்கூடியதா யிருக்க வேண்டுமென்றும் அறிவித்ததைஎவரும் அங்கீகரிப்பர். பெரியவர்களுக்குச் சொல்லிய புத்திமதி இன்னும் விசேஷமாகும். தாம் பார்த்த வரையில் ஜனங்கள் (ஆங்கிலம் படித்த ஜனங்கள்) இங்கிலீஷ் நன்றாகப் பேசுகிறார்களேயன்றித் தமிழ் நன்றாகப் பேசுவதைத் தாம் பார்க்கவில்லையென்று மிஸ்டர் ரென் இடித்துச்சொல்லியதை நம்மவர்கள் கவனிப்பார்களோ? ஆங்கிலம் படித்தவர்கள் தம் தாய் பாஷையை அலட்சியம் செய்தால் அவர்கள் பிறரால் மதிக்கப்பட மாட்டார்களென்று மிஸ்டர் ரென் அறிவுறுத்தியதை நாம் அங்கீகரிக்கிறோம். ஆங்கிலத்தில் முழுப்படிப்பு, அரைபடிப்பு, கால்படிப்புப்படித்துவிட்டுத் தங்களுக்குத் தமிழில் பேசத் தெரியாதென்று பெரியகூட்டங்களில்சொல்லித்திரியும் போலித் தேசபக்தர்கள் இதைக் கவனிக்குமாறு வேண்டுகிறோம்.

பெற்றோர்கள் கவனிக்க.

பம்பாய் கவர்னரான ஸர் ஜார்ஜ்லாயிடு சமீபத்தில் புனா காலேஜைத் திறந்து வைத்தபோது பெற்றோர்களுக்கு ஒரு நல்ல யோசனை கூறினார். இந்தியா உலகத்திலுள்ள நாடுகளோடு பெரிய பொருளாதாரப் போட்டி போடவேண்டிய காலம் நெருங்கிவிட்டதென்றும் அதற்கு இந்தியப் பெற்றோர்கள் தயாராக விருக்க வேண்டுமென்றும், அவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தொழில் படிப்பில் பயிலுவிக்க வேண்டுமென்றும் சொன்னார். தொழில் படிப்பு முறையில் பெற்றோர்கள் பங்கெடுத்துக் கொண்டு அதைத் திருத்தியமைப்பது அவசியமென்று விளக்கினார். இதுகாறும், குமாஸ்தா துறைக்கும் வக்கீல் தொழிலுக்கும் பலாபலன்களை அறியாமல் தங்கள் பிள்ளைகளை அனுப்பிவந்த பெற்றோர்கள் ஸர் ஜார்ஜ் லாயிடின் புத்திமதிகளைக் கவனிக்க விரும்புகிறோம்.

கிலாபத் தின விரதம்.

நமது பத்திரிகை இன்று அச்சேறும் வரையில் நமக்குக் கிடைத்த செய்திகளினின்று இந்தியாவில் கிலாபத் தின விரதம் எங்கும் அமைதியாகவும் உருக்கமாகவும் சிரத்தையாகவும் கொண்டாடப்பட்டதென்று அறிகிறோம். சண்டை சச்சரவுகள் ஓரிடத்திலும் நடைபெறவில்லை. இத்தஞ்சை மாநகரிலும் கிலாபத் தினத்தில் கடைகள் மூடப்பட்டிருந்தன. வியாபாரம் நடைபெறவில்லை. முஸ்லிம்கள் தங்கள் மசூதியில் தொழுகை செய்த வண்ணமாக விருந்தார்கள். மாலையில் மணிக்கூண்டு மைதானத்தில் ஒரு பெரிய கூட்டம் கூட்டப்பட்டது. அதற்கு அக்கிராசனம் வகித்த நமது பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் இ. சூரியநாராயண ஐயர் அவர்கள் கிலாபத் தின விரதத்தின் மகிமையைச் சபையோர்களுக்கு விளக்கிக் காட்டினார். பிறகு ஒத்துழையாமை தீர்மானம் எல்லோராலும் நிறைவேற்றப்பட்டது.

தஞ்சை முனிசிபல் சேர்மென்.

தஞ்சை முனிசிபல் சேர்மனயிருந்த மிஸ்டர் எ. டி. பன்னீர் செல்வம் அவர்கள் சென்ற ஜூலை மாதம் 29-ந் தேதியில் தமது ஸ்தானத்தினின்றும் விலகிக்கொண்டார். விலகுமுன், கருந்தட்டாங்குடி வாசிகளும் அக்கம் பக்கங்களிலுள்ளோரும் என்றைக்கும் மறவாமலிருக்கும் வண்ணம் ஒரு காரியம் செய்ததைப்பற்றி நாம் வருந்துகிறோம். கரந்தை வாசிகளாகிய சிலரின் வேண்டுகோளுக்கிணங்கிக் கரந்தை முனிசிபல் டிஸ்பென்சரியில் வேலை பார்த்துவந்த

டாக்டர் முத்துசாமி நாடாரை வேலையினின்றும் மாற்றியதே யாகும். இதற்குக் காரணம் இன்னதென்று காந்தை வாசிகளுக்கு விளங்கவில்லை. டாக்டர் நாடாரவர்கள் கருணையோடும், அனுதாபத்தோடும் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்குக் காலையிலும் மாலையிலும் சிகித்சை செய்து வந்தாரெனும் விஷயம் யாவரும் அறிந்ததாகும். அவர் பேரில் ஒருவருக்கும் யாதொருவிதமான புகாரில்லாமலிருக்கையில் திடீரெனப் பெரிய டாக்டரவர்களுக்குச் சேர்மன் கடிதம் எழுதி மாற்றிவைத்ததற்கு காரணம் யாதோ? தெரியவில்லை. பொதுஜனங்களுக்கு மிகவும் ஆச்சரியத்தை உண்டுபண்ணியிருக்கின்றது. நல்லவர்கள் முனிசிபல் உத்தியோகங்களுக்குத் தேவை இல்லைபோலும்?

இஃதென்ன முறை!

ஸ்ரீமான் அமாவாசை மூப்பன் என்பவர் ஸ்ரீரங்கம் ஆதி திராவிட வகுப்பினரின் பிரதிநிதியாக ஸ்ரீரங்கம் முனிஸிபாலிடியில் ஓர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். சமீபத்தில் கூடிய ஸ்ரீரங்கம் முனிசிபல் மீட்டிங்கில் ஸ்ரீமான் மூப்பன் முனிஸிபல் பாடசாலையில் ஓர் உபாத்தியாயரானதால் அவர் முனிஸிபல் கவுன்ஸிலராகவிருக்கக் கூடாதென்று தீர்மானம் செய்யப்பட்டது. பிறகு சென்றமாதம் 25 ந்தேதி மறுபடியும் முனிஸிபல்மீட்டிங் குகூடியபோது, ஸ்ரீமான் மூப்பனும் சேர்மெனும் தவிர கவுன்ஸிலர்களில் ஒருவரேனும் வரவில்லையென்று ஹிந்துப்பத்திரிகையின் நிருபர் அறிவிக்கிறார். இஃதுண்மையானால், ஸ்ரீரங்கம் முனிஸிபல் கவுன்ஸிலர்கள் நடந்துகொண்ட முறை என்ன முறையென்று கேட்கிறோம். ஸ்ரீமான் மூப்பனின் நியமனம் ஆட்சேபிக்கக்கூடியதாயிருந்தாலும் அந்த ஆட்சேபனைக்கு எவ்வாறு பரிகாரம் தேடவேண்டியது? ஜன நாயக ஆட்சி முறை வேண்டுமென்றும் விரிவான ஸ்தல சுயஆட்சி வழங்கப்படவேண்டுமென்றும் நாம் கோரி நிற்கும் இந்நாளில், ஸ்ரீரங்கம் முனிஸிபல் கவுன்ஸிலர்கள் ஆங்கிலோ இந்தியர்கள் பரிகசிக்கும்படி நடந்துகொண்டது விசனிக்கத்தக்கது.

திலகர் பெருமான் மீது இரங்கற்பா.

காலஞ்சென்ற வித்வான் சூரியநாராயண சாஸ்திரியார் குமாரன் ஸ்ரீமான் நடராஜன் அவர்களால் இயற்றப்பட்டது.

சீர் மிகப் பெற்றுச் சிறப்புற் றோங்கி
மாரதர் மலிந்த பாரத நாட்டிற்
பல பாகங்களுள் பம்பாய் என்னும்
மாகாணத்தில் மா 'ரத்தினகிரி'
என்னும் நகரில் இனிதவதரித்து,
உலகம் புகழ்ந்திடப் பலகலை கற்று,
தேசபக் தர்கள் திலகமாய் நின்று,
எந்நாட்டினர்க்கும் இந்நாட்டின் புகழ்
தப்பற எடுத்துச் செப்பவே சென்ற
கேசரியாம் நீ 'கேசரி' தன்னொடு
மாநிலம் போற்றும் 'மராட' வென்னும்
சத்துவ மிகுந்த பத்திரிகைகளை
நடத்தி யெவர்க்கு நலமிகச் செய்து,
மகுடம் இல்லா மன்னவ னாகித்
தன்னர சிருக்கையைத் தரணியில் இந்திய
மக்கள் தமது மனதிற் கண்டு
இலங்கிய தருவாம் திலகமே! நீயுன்
ஆருயிர் இழந்த காரண மென்னோ?
பாவலர், நாவலர், காவலர் கதற,
பாரதமாதா பரதவித் தலற,
மக்களோடுற்றோர் மனம் நொந்தழுகச்
சென்ற தென்னோ சொல் மன்ற விளக்கே!
பூவுலகிற் புகழ் போதும் என்றெண்ணித்
தேவருலகினைத் தேடி நாடினையோ?
இந்நிலந்தனிலுன் நின்னுரை கேட்டும்
கனியாதவர்தம் கல்லினை நிகர்க்கும்
மனதைக் கரைத்திட வானுல கத்தமர்
பிரமனைவேண்டப் பேணிச்சென்றனையோ?
எவ்வாறாயினும் இந்தியராம யாம்
நின்னைப்-பிரிந்து நிலைமிகக் கலங்கி
மீகானில்லா மரக்கல மென்னத்
சித்தங் கலங்கித் தத்தளித்தம்ம!
யாது மறியாது பேதுற்றனமே!

திலகர் பெருமான்.

திலகர் பெருமான் ஜூலை 31 ந் தேதி இரவு 12-45 க்குப் பம்பாயில் காலகதியடைந்தாரெனக்கேட்டு இந்தியர்கள் ஆறாத்துயரத்திலழுந்தியிருக்கிறார்கள். இவர் பிழைத்து விடுவரென்று டாக்டர்கள் அபிப்பிராயங்கள் கொடுத்தார்கள். கடவுள் கட்டளைக்கு யார் என்ன செய்ய முடியும்? இவர், இறப்பதற்கு முன்னர் தர்மம் க்ஷீணித்து அதர்மம் மேலோங்கும் காலத்தில் தர்மத்தை நிலைநிறுத்தும்பொருட்டுத் தாம்அவதரிப்பதாகப் பகவத்கீதையில் 4-வது அத்யாயத்தில் 7-வது சுலோகத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் சொல்லியதை ஒப்பித்தனராம். இறந்த செய்தியைக் கேட்ட ஜனங்கள் உயர்ந்த பணக்காரர்களும் பரம ஏழைகளு முள்பட இவர் இறந்த மாளிகையை நோக்கிச் சென்றார்கள்.

பம்பாய் நகரத்திலுள்ள ஜனத்தொகையில் பாதிப்பேர் திலகரைப் பார்க்க வந்தார்களென்று சொல்லப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை பகல் ஒரு மணிக்குத் திலகரின் பிரேத ஊர்வலம் புறப்படுமென்று எங்கும் அறிவிக்கப்பட்டது. ஊர்வலம் சென்ற தெருக்கள் வழியே லட்சக்கணக்கான ஸ்திரீ புருஷர்களும் கண்ணும் கண்ணீருமாய் அழுது கொண்டு நின்று கொண்டிருந்தார்கள். பிரேதத்தின் பின்னர் மகாத்மா காந்தி, ஜனாப் சவுக்கத்தலி முதலிய தலைவர்கள் சென்றார்கள். லாலா லஜபதிராய் எவ்வளவோ முயன்றும் குறித்த காலத்தில் வர முடியவில்லை.

பிரேத சம்ஸ்காரம் செய்யப்பட்ட விடத்தில் லாலா லஜபதிராய் திலகரின் குணங்களையும் அவர் தேசத்திற்குச் செய்த சேவைகளையும் பற்றி உருக்கமாகப் பேசினார்.

எங்கும் துக்கம்.

துக்கச் செய்தி நாடெங்கும் பரவவே அந்தந்த ஊரார்கள் துக்க ஸாகரத்தில் மூழ்கி விட்டார்கள். முதல் தேதியன்று கிலாபத்தினத்தோடு இந்தத் துக்கச் செய்தியும் எட்டியதால், இந்தியாவின் முக்கிய நகரங்களில் துக்கம் பரவியிருந்தது. கல்கத்தா, நாகபூர், பஞ்சாப், சென்னை, ஸிந்து, அலகபாத், ஸிம்லா டெல்லி, முதலிய பிரதான நகரங்களிலும் இன்னும் பல விடங்களிலும் திலகரின் பிரிவாற்றாமையைக் குறித்து அனுதாபக் கூட்டங்கள் கூட்டப்பட்டு திலகரின் குணங்கள் கொண்டாடப்பட்டன. தஞ்சைமா நகரில் திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு மணிக்கூண்டு மைதானத்தில் ஒரு பெருங்கூட்டம் கூடியது. ஸ்ரீமான் மல்லாரிராவ் அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீமான். எ, ரங்கசாமி அய்யங்கார், கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார், ஸ்ரீமான், இராமச்சந்திர செட்டியார், கமால் சாகிப், இஸ்மால்சாகிப், சாம்பமூர்த்தி ராவ், கே. நடராஜன், அற்புதானந்த சுவாமியார், சே சு ஆர் சுவாமிநாத முதலியார், இ. சூரிய நாராயண ஐயர், முதலியோர்கள் ஸ்ரீமான் ரங்கசாமி ஐயங்காரால் பிரரேபிக்கப்பட்ட அனுதாபத் தீர்மானத்தைப் பற்றிப் பேசினார்கள்.

கிலாபத் தின விரதம் எங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆகஸ்டு மாதம் முதல் தேதி யன்று கிலாபத் தினம் வருகிற தென்றும் அன்று எல்லோரும் கடைகளை மூடிக் கடவுளைப் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றும்பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டிருந்தபடி, தஞ்சைமா நகரில் வெகு மும்முரமாக கிலாபத்தி விரதம் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள் எங்கே பார்த்தாலும் மூடப்பட்டிருந்தன தொழிலாளர்கள் வேலை செய்ய வில்லை. தெருக்களில் மனிதர்கள் நடமாட்டம் இல்லை யென்றே சுருக்கமாகச் சொல்லி விடலாம். முஸ்லீம்கள் மசூதிகளில் துருக்கிக்கு வந்திருக்கிற ஆபத்து நீங்க வேண்டுமென்று குர்ரான் ஓதினார்கள். மாலையில் மணிக்கூண்டு மைதானத்தில் ஒரு கூட்டம் கூடியது. ஸ்ரீமான் இ. சூரிய நாராயண ஐயரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். மெஸர்ஸ் கமால் சாகிப், இராமச்சந்திர செட்டியார், சையத் டஜுடீன் சாகிப் முதலியாரவர்கள் பேசினார்கள். ஒத்துழையாமை தீர்மானம் சபையோர்களால் நிறைவேற்றப் பட்டது.

வெளியூர்கள்.

தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த வெளியூர்களில் கிலாபத் தின விரதம் சிரத்தையாக அனுஷ்டிக்கப்பட்ட தென்று நமக்குச் செய்திகள் வந்திருக்கின்றன. அவைகளெல்லா வற்றையும் வாரப் பத்திரிகையில் பிரசுரிக்க இடமில்லாததைப்பற்றி நாம் மிகவும் விசனிக்கின்றோம்.

அய்யம்பேட்டைக்கு அடுத்தாற் போலிருக்கும் வழுத்தூர் கிராமத்தில் ஒரு முஸ்லிம் மகா ஜனக்கூட்டம் காலை எட்டு மணிக்குக் கூடியது ஸ்ரீமான் இ. சூரிய நாராயண ஐயர் அக்கிராசனம் வகித்தார். ஜனாப்களான கோசு முகமத் ஹூஸேயின் ராவுத்தர், குலாம் ரஸூல், முகமத் ஹூஸேயின் ஆலிம்சாகிப், குலாம் ஹூஸேயின் கா திரி முதலியோர் பேசினர். கிலாபத்கமிட்டியாருக்கு ஒத்துழையாமை தீர்மானம் சபையோர்களால் நிறைவேற்றப்பட்ட விஷயம் அறிவிக்கப்பட்டது.

உலகப்போக்கு.

ஜில்லா

இம்மாதம் 30-ந் தேதி கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார் அரசியல் கட்சி பேதங்களைப்பற்றித் தஞ்சை மார்வ்ஷ் ஹாலில் ஓர் உபந்நியாசம் செய்தார். அதில் சாஸ்திரியார் இரு கட்சியினர்களுக்குள்ள வித்தியாசங்களை நன்கு விளக்கிக்காட்டி மிதவாதிகள் தேசத்தின் நலத்தை நாடுபவர்களென்றும், தேசியக் கட்சியினர் அவசரப்பட்டுக் காரியங்கள் செய்பவரென்றும் ஜனங்கள் மிதவாதிகளைப் பின்பற்றுவது அவசியமென்றும் பல உதாரணங்களால் விவகரித்துச் சொன்னார்.

* *

31-ந் தேதி தஞ்சை ஸ்ரீ அனிபெஸன்ட் லாட்ஜில் கனம் சாஸ்திரியார் அரசியல் கட்சி பேதங்களைப்பற்றித் தமிழில் பேசினார்.

* *

சூலமங்கலம் கிராமத்தார்கள் 1920 ௵ ஆகஸ்டு மாதம் 2-ந் தேதி இரவு 8 மணிக்கு ஷையூர் ஸ்ரீ ஸௌந்திர ராஜஸ்வாமி ஸந்நதியில் பிரம்மஸ்ரீ ஏ. எஸ். வைத்தினாத பாகவதர் அவர்கள் அக்ராசனத்தின்கீழ் கூடி, லோகமான்ய பாலகங்காதர திலகர் அவர்கள் காலஞ் சென்று விஷயத்தைப்பற்றி விசனித்து, ஷை மகான் அவர்களின் மஹிமையை அநேகர் எடுத்துப் பேசி, ஷையார்கள் பிரிவு இந்தியாவிற்குப் பெரிய நஷ்டம் என்றும், மேற்படியார் அவர்களுடைய பிரிவால் உண்டான அனுதாபத்தை ஷையார் அவர்கள் குடும்பத்தார் அவர்களுக்கு பத்திரிகை மூலமாய்த் தெரிவிக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

* *

திருக்காட்டுப்பள்ளி திருப்பூந்திருத்தி முதலிய விடங்களில் ஸ்ரீபான் ரங்கசாமி ஐயங்கார் பிரசங்கம் செய்யவேண்டியிருந்தவர் திலகரின் மரணத்தைக் கேட்டு அவ்விடங்களுக்குப் போகவில்லை, நேற்று செவ்வாய்க்கிழமை இவர் அதிராம்பட்டினத்திற்கும் பிறகு நாகப்பட்டணத்திற்கும் பிரசங்க யாத்திரையில் சென்றார்.

* *

பாபநாசத்தில் கூடும் தஞ்சை ஜில்லா கான்பரஸுக்கு வரும் பிரதிநிதிகள் தங்குவதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. ஸ்திரீகளுக்கென்று கான்பரன்ஸ் பந்தலில் தென்புறமாகப் பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பாபநாசம் மேல வீதியில் பந்தல் அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. பந்தலுக்குத் தென்புறத்திலும் வடபுறத்திலும் பிரதிநிதிகள் தங்க சிறிய பந்தல்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

* *

சென்ற மாதம் 29-ந் தேதி ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி ஐயங்கார் காங்கரஸ் பிரசார வேலையைப் பற்றிக் கும்பகோணத்தில் ஒரு விசேஷப் பிரசங்கம் செய்தார். அவர் மிதவாதிகள் தேசியக் கட்சியினர்கள்மீது சுமத்தும் குற்றங்களைக் கண்டித்து அவைகளுக்குப் பதிலிறுத்தினார்கள்.

* *

நாகை ரெயில்வே தொழிலாளர் சங்கத்தில் காரியதரிசியான மிஸ்டர் வே. வேங்கடாச்சாரியரும், இன்னும் பிற 25 அங்கத்தினர்களும் சங்கத்தினின்று விலகிக்கொண்டார்கள்.

* *

சென்ற மாதம் 25-ந் தேதி மாயவரம் தாலுக்கா கிராம உத்தியோகஸ்தர்களின் கூட்டம் திருக்கடையூர் லோகல் பண்டு ஸ்கூலில் தலைச்செங்காடு கிராம முனிசீப் அவர்கள் தலைமையில் பகல் இரண்டு மணிக்குக் கூடியது. கிராம முனிசீப்கள் சம்பள விஷயமாய்ப் பேசப்பட்டது. பிறகு பதினாயிரம் ரூபா வரையில் பங்குகள் சேர்ப்பதென்றும் அதைக்கொண்டு கிராம உத்தியோகஸ்தர்களின் க்ஷேமத்தை உத்தேசித்து ஒரு ஐக்கிய நாணய பாங்கு ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. மிராசுதார்களின் க்ஷேமலாபங்களைக் கவனித்து வர்த்தக சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டது.

* *

திருக்கண்ணபுரத்தில் இப்போது தான் குறுவை நடவு ஆகிவருகிறது. விவசாயிகளுக்கு ஐக்கிய நாணய சங்கத்தில் ஏராளமாகச் சென்ற வருஷம் போல், எரு சப்ளை செய்து வருகிறார்கள்.

* *

பாபநாசம் முஸ்லிம் வாலிப சங்கத்தின் மூன்றாவது கூட்டம் ஜனாப் முகம்மத் ஹாலீம் சாகிப் அக்கிராசனத்தில் கூடியது, ஒரு பெரிய பொதுக்கூட்டம் கூடுவதாகத் தீர்மானிக்கப்பட்டுத் தஞ்சை ஜில்லா மகா நாட்டிற்கு 20 முஸ்லிம் வாலண்டியர்களும் 30 பிரதிநிதிகளும் 10 உபசரணைக்கமிட்டியார்களும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* *

திலகர் மரணத்தை உத்தேசித்துத் துக்கம் கொண்டாடும் பொருட்டுத் திலகர் இறந்த பத்தாவது தினமாகிய இம்மாதம் 9-ந் தேதி இந்தியா முழுவதும் துக்க நாளாகக் கொண்டாடப்பட வேண்டுமென்றும் அன்று அனுதாபக் கூட்டம் கூட்டப்பட வேண்டுமென்றும் இந்திய சுயஆட்சி சங்கத்தின் நிர்வாக கமிட்டியார் தீர்மானித்திருக்கின்றனர்.

* *

நமது தஞ்சைமா நகரத்தில் அன்று ஒரு பெரிய கூட்டம் மணிக்கூண்டில் கூட்டப்படுவதோடு வியாபாரிகளும் கடைகளை மூடிவிட உத்தேசித்திருக்கிறார்களென்று தெரிகிறது. திலகரின் ஞாபகத்தைச் சாசுவதமாக நிலை நிறுத்தும் பொருட்டுத் தஞ்சை வாசிகளும் ஜில்லா வாசிகளும் பெரிய முயற்சிகளெடுக்கப் போவதாகவும் தஞ்சையில் ஒரு பிரசங்க மண்டபம் கட்ட யோசித்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

தஞ்சை ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் 2-வது மஹாநாடு 1920௵ ஆகஸ்டு௴ 8௳ ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும் மாலை 5½ முதல் 8½ வரையிலும் பாபநாசத்தில் கூடும். சென்னை சுதேசமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் A. அரங்கசாமி அய்யங்கார் அவர்கள் அக்கிராசனம் வகிப்பர்.

* *

சப் ஜட்ஜ் ஸ்ரீமான் வி. ஷாஷ்யமய்யங்கார் கும்பகோணம் சப் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

* *

ஜில்லா முனிசீப் ஸ்ரீமான் பி. சுப்பராவ் அவர்கள் தஞ்சை அடிஷனல் சப் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

* *

நாகப்பட்டணம் டிப்டி போலீஸ் சூபரின்டென்டென்ட் மிஸ்டர் பி. பாலகிருஷ்ண மேனன் உத்தரவு வந்தவுடன் பாலக்காடு சப்டிவிஷனுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

* *

தஞ்சை அஞ்ஜுமான் காரியதரிசி ஜனாப் ஷெயிக் அகமத் சாகிப் அவர்கள், ஐகோர்ட் உத்தரவினால் தஞ்சை தளவாய் பாளையம் எஸ்டேட்டுக்கு ஸ்ரீமான் ஏ. நரசிம்மாச்சாரியாருக்குப் பதிலாக ரிஸீவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

உள் நாடு.

எல்லா இந்தியச் சுய ஆட்சி சங்கத்தார் ஒத்துழையாமையை ஆதரித்து இளவரசரை வரவேற்காமல் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்று, தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள்.

* *

பம்பாய் லிபரல் சங்கத்தார் ஒத்துழையாமை இயக்கத்தைக் கண்டித்துத் தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள்.

* *

லாகூரில் பிரசுரமாகும் ஜமீன்தார் பத்திரிகையின் ஆசிரியர் ஹைதராபாத் நிஜாமுக்கு ஒரு கடிதமெழுதி, அதில் துருக்கிமீது மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் கொண்டிருக்கிற கொள்கையை மாற்ற முயற்சி செய்யும்படி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

* *

கல்கத்தாவில் விசேஷ காங்கரஸ் 4, 5, 6, 7-ந் தேதிகளில் கூடுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

* *

லாகூரில் பிரசுரமாகும் ஜமீன்தார் பத்திரிகை இரண்டாயிரம் ரூபா ஜாமீன் கட்டிவிட்டு வெளிவந்து கொண்டிருக்கிறது.

* *

கல்கத்தாவைச் சேர்ந்த நோக்கஹாலி ஜில்லா ஸ்கூல் கமிட்டி அங்கத்தினரும், கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுமான கான்சாகிப் அப்துர் ஆஷிட் கான் தமது பட்டங்களையும் உத்தியோகங்களையும் ராஜினாமா செய்து விட்டார்.

* *

சென்னை மூலாதாரக் கல்வி மசோதாவின் ஸெலக்ட் கமிட்டி ரிபோர்ட் வெளியாகியிருக்கிறது.

கிலாபத்தின விரதம் (5ம் பக்கம் தொடர்ச்சி)

திருக்காட்டுப்பள்ளி, திருப்பூந்திருத்தி, இராஜகிரி, பண்டாரவாடை, சக்கராப்பள்ளி, கும்பகோணம், நாகப்பட்டினம், மாயவரம், நாகூர், சீர்காழி, நன்னிலம், வல்லம், முதலிய விடங்களில் கிலாபத்தினம் கொண்டாடப்பட்டது.

பிறகு பம்பாய், கல்கத்தா, சென்னை, லாகூர் அலகபாத், திருப்பூர், கோயமுத்தூர், கொச்சி, தூத்துக்குடி, திருச்சி, மதுரை, சிதம்பரம், சேலம், வேலூர், திருப்பத்தூர், வாணியம்பாடி, ஒட்டபிடாரம், சைதாப்பேட்டை கூடலூர், மதுராந்தகம், செங்கற்பட்டு, காஞ்சிபுரம், சித்தூர், நெல்லூர், ஈரோடு, குளித்தலை, கரூர் முதலிய பல அநேக ஊர்களில் கொண்டாடப்பட்டது.

திலகர் பெருமான்.

(இரண்டாம் பக்கம் தொடர்ச்சி.)

கோபால கிருஷ்ண கோகலே, மேத்தா, சுரேந்திரநாத் பானர்ஜி, நாராயண சந்திரவர்க்கர். முதலியோர் மிதவாதிகளின் தலைவர்கள்.

தேசியக் கட்சியினரோ, இந்தியா இப்பொழுதே பூரணச் சுய ஆட்சியடையத் தகுதியுள்ள தேயமெனும் நம்பிக்கை வாய்ந்தவர்கள். மந்திரத்தில் மாங்கனி விழாதெனும் பழமொழியை முற்றிலும் அறிந்தவர்கள். அதிகாரிகளிடமிருந்து. அரசியல் நிர்வாக அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமாயின், சுதேசியம், பகிஷ்காரம், தேசியக் கல்வி, சாத்விக எதிர்ப்பு எனுங் கொள்கைகளை யனுஷ்டிக்க வேண்டுமெனும் உறுதியுள்ளவர்கள். தேசியக் கிளர்ச்சியில் சட்ட வரம்புகடவாது, எத்தகைய இடுக்கண் நேரிடினும் அதனைப் பொருட்படுத்தாதிருப்பவர்கள். தேசப்பணியில் உயிரையுங் கொடுக்கச் சித்தமாயிருப்பவர்கள். இந்திய சாஸ்திரங்களிலும் வேதங்களிலும் தொன்மையான நாகரிகத்திலும் ஆசைகொண்டவர்கள். 'நான், எனும் தன்மையை முற்றிலும் மறந்தவர்கள். லோகமான்ய திலகர், அரவிந்த கோஷ், விபினசந்திர பாலர், அஸ்வினிகுமார தத்தர், லாலா லஜபதிராய், விஜயராகவாசாரியார், கபார்தே போன்றவர்கள் தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள். தேசியக் கட்சியின் பிரதான தலைவர் திலகர் பெருமான்.

வங்காளப் பிரிவினையை ரத்து செய்யும் பொருட்டும், இந்திய நாடு சுய ஆட்சியடையும் பொருட்டும் திலகர் பிரானும் அவரைப் பின்பற்றும் தேசிய வாதிகளும் கடுமையான கிளர்ச்சி செய்து வந்தார்கள். கிராமங்களிலும் நகரங்களிலுஞ் சென்று சுதேசீய விரதத்தின் மகிமையை பாமார்களுக்குத் தெளிவாய்ப் புலப்படுமாறு எளிய நடையில் பிரசங்கித்து வந்தார்கள். சுதேசக் கடைகளைத் திறந்து வைத்தார்கள். தேசாபிமானத்தையும் தேசீயக் கல்வியையும் புகட்டும் பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் அநேக விடங்களிலும் ஏற்படுத்தினார்கள். இத்தகைய முயற்சிகளின் பயனைப் புற்றினின்றும் வெளிப்போந்த நாகம்போல் பாரத பூமி எங்குமோர் நவினசக்தி எழும்பியது. இந்தியர்கள் தங்கள் உள்ளத்திற் புதைந்து கிடந்த ஆத்ம சக்தியின் ஆற்றலையுணரலானார்கள்.

அவ்வருடத்திய காங்கிரஸுக்குத் திலகர் பிரான் தலைமை வகிக்க வேண்டுமென்று விபினசந்திரபாலர் வட இந்தியா முழுவதும் பிரயாணஞ்செய்து வற்புறுத்தலாயினர், மிதவாதிகள் நடுக்கமுற்றுத் தாதாபாய் நௌரோஜியை அக்கிராசனாதிபதியாகத் தெரிந்தெடுத்தார்கள். கல்கத்தாவில் அப்பெரியாரின் அவைத் தலைமையின்கீழ் நடந்த தேசிய காங்கிரஸில் திலகர் பெருமான் விஷயாலோசனைக் கமிட்டி முன்பாகச் சுதேசியம், பகிஷ்காரம், தேசீயக் கல்வி, சுய ஆட்சியெனுங் கொள்கைகளைத் தீர்மானங்களாகக் கொணர்ந்து அவற்றின் அவசியத்தை வந்திருந்த பிரதிநிதிகள் உணரும்படி செய்தார். மிதவாதிகள் இத்தீர்மானங்களைக் காங்கிரஸ் சபையில் எதிர்க்கத் துணியவில்லை. விலையதிகமாயினும் சுதேசிப் பொருள்களையே உபயோகப்படுத்த வேண்டுமெனவும், இங்கிலாந்தினின்றும் வருஞ் சாமான்களை விலக்க வேண்டுமெனவும் அரசாங்க வதிகாரிகளின் நிர்வாகத்திற்குட்படாததும் தேசீயக் கல்வியைப் புகட்டுவதுமான கலாசாலைகள் தோன்ற வேண்டுமெனவும் இந்தியச் சிறுவர்கள் அத்தகைய போதனை சாலைகளில் கல்வி கற்கவேண்டுமெனவும் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் சுய ஆட்சி பெற்றிருக்கும் இதர நாடுகளுக்கொப்பாய் இந்தியாவுக்கும் சுதந்தரம் வழங்கப்பட வேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தேயமெங்கும் சுதந்தர தாக மதிகரித்தது. இந்தியர்கள் யாவரும் திலகரைக் கண்ணபிரானின் கலியுக அவதாரமாகக் கொள்ளலாயினர். மிதவாதிகள் மனத்தில் பொறாமை குடிகொண்டது. திலகரிடத்து இந்தியருக்குள்ள மதிப்பையுஞ் செல்வாக்கையும் எவ்விதத்திலும் அழிக்க வேண்டுமென வதிகாரிகள் பிரயாசைப்படலாயினர்.

(இன்னும் வரும்)

திருவனந்தபுரம்
27-7-20 } ஆர். கணேசன்.

தலைவர்களின் அபிப்பிராயங்கள்.

நம் தேசத்தில் பல கட்சிகள் ஏற்பட்டிருப்பதாலும். அதனதன் தலைவர்கள் முக்கிய விஷயங்களைப்பற்றிக் கூறும் அபிப்பிராயங்களையும் பேச்சுக்களையும், சுருக்கமாக நம் நேயர்கள் தாங்கள் அறியவேண்டி நிமித்தம், நமது பத்திரிகையில் வெளியிட வேண்டுமென்று விரும்புவதாலும் நாம் அவர்களுடைய விருப்பத்திற் கிணங்கி அவைகளை வெளியிடுகிறோம். ஆனால் நம் சகோதரர்கள் அவ்வந்த அபிப்பிராயங்களைக் கோபதாபமின்றியும் மனதில் வேற்றுமைகளின்றியும் சமரச பாவத்துடன் படிக்க வேண்டுகிறோம். படிக்கும் காலத்தில் உண்மையைப் புறக்கணித்தல் கூடாதென்று நாம் கேட்டுக்கொள்கிறோம். ப-ர்.

ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர்.

இம்மாதம் 26ந்தேதி தூத்துக்குடியில் ஆறுவது நாடார் மகாஜன மகாநாடு கூடியது. அதற்கு அக்கிராசனம் வகித்த ஸர். பி. எஸ. சிவஸ்வாமி ஐயர் செய்த பிரசங்கத்தில் நாம் சில முக்கிய குறிப்புகளை மாத்திரம் ஈண்டு வெளியிடுகிறோம்.

வகுப்பு மகாநாடுகள் இக்காலத்தில் ஸகஜமாகக் கூட்டப்படுகின்றன. இவைகள் நம்தேசீய சமூக வாழ்க்கையின் எழுச்சிகளாகும். ஒவ்வொரு வகுப்பும் தேச முன்னேற்றத்தைக் குறித்து முன் செல்லவேண்டும். வகுப்பு மகாநாட்டின் முக்கிய நோக்கம் அவ்வகுப்பு க்ஷேமங்கள் சம்பந்தப்பட்டதாயிருத்தல்வேண்டும். உங்களுடைய வகுப்பு வாழ்க்கையில் ஜயமடைவதற்குரிய நற்குணங்கள் கொண்டதாயிருக்கிறது. சுறுசுறுப்பு, விடா முயற்சி, சிக்கனம், ஒற்றுமை, முற்போக்கு முதலிய நற்குணங்கள் உங்கள் வகுப்பின் முக்கிய குணங்களாகும். கையால் வேலை செய்வதைநீங்கள் அகௌரவமென்று நினைக்கவில்லை. விவசாயம் வர்த்தகம் வியாபார முறை முதலிய துறைகளில் நீங்கள் பிரசித்திபெற்றிருக்கிறீர்கள்.

தேசத்தில் பொருளாதாரப்போட்டி அதிகரித்துவருமிக்காலத்தில் இதற்கு நல்ல படிப்புவேண்டுமென்பதையாவரும்ஒப்புக்கொள்வர்கேவலம்தமிழ்ப்படிப்பு மாத்திரம் போதாது. உயர்ந்த நல்ல படிப்பும் நல்ல தொழிற்படிப்பும் வேண்டும். ஹைஸ்கூல்கள் ஏற்பட்டிருப்பதுபோதா. இன்னும் உங்களுடைய தேவைகளுக்குத் தக்கபடி ஹைஸ்கூல்கள் ஏற்படுத்தப்படவேண்டும். ஹைஸ்கூல் படிப்புபோதாது. இண்டர்மீடியட் படிப்பு வரைப் படித்தால் குறுக்குவழியில் செல்ல ஏதேனும் ஒரு தொழிற் படிப்புக்குப்போதிய அறிவுவிருத்தி ஏற்படும். நாடார் வகுப்பினர் தொழில் துறையிலும் வியாபாரத் துறையிலும் இறங்கி வேலை செய்வதற்குரிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இதற்காக அவர்களுக்கு உபகாரச்சம்பளங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். இந்த விஷயத்தை நீங்கள் கவனிக்கவேண்டும். தொழில் துறையிலும் வியாபாரத் துறையிலும் உங்கள் வகுப்பினர்களுக்குப் பிடித்தமிருப்பதால், நீங்கள் இத்துறைகளில் இறங்கி மூலதனத்தை உபயோகிக்கலாம். உதாரணமாக நெசவுத் தொழிலை எடுத்துக் கொள்ளுங்கள். மதுரை, இராமநாத புறம் திருநெல்வேலி ஜில்லாக்களில் ஒன்பது லட்சம் ஏகராக்கள் பருத்திப்பயிர் செய்யப்படுகின்றன. கடப்பை, கர்நூல் பல்லாரி அனந்தப்பூர் முதலிய ஜில்லாக்களில் பயிரிடப்படும் நில விஸ்தீரணத்தைக் காட்டிலும் கொஞ்சம் குறைவுள்ளது. பம்பாய் மாகாணத்தில் பருத்தி சாகுபடி செய்யப்படும் நில விஸ்தீரணம் 45 லட்சம் ஏகராக்களாகும். சென்னை மாகாணத்திலோ வென்றால் 31 லட்சமாகும். பம்பாய் இராஜதானியில் 170 மில்கள் இருக்கின்றன. நம் மாகாணத்தில் 25 மில்கள் தானிருக்கின்றன. ஆமதாபாத் ஜில்லாவில் 4 லட்சத்து 8 ஆயிரம் ஏகராக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இந்த ஜில்லாவில் மாத்திரம் 64 மில்களிருக்கின்றன. இவ்வனமிருக்கும் போது, நீங்களேன் இத்துறையில் இறங்கி வேலை செய்தல்கூடாது? பருத்தி நெசவுத்தொழில் தாராளமாக உங்களுடைய ஜில்லாவில் ஆரம்பிக்கப்படலாம். சிலர் பணமில்லையென்று கூறுவதை நான் அங்கீகரிக்கவில்லை வியாபாரக் கம்பெனிகளை ஏற்படுத்தி நடத்தமுடியுமோ? வென்ற அவநம்பிக்கையினால் தான் நம்மவர்கள் இத்துறையில் அதிகமாக இறங்கவில்லையென்று நான் அபிப்பிராயப் படுகிறேன். ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகளை நீங்கள் தாராளமாக ஏற்படுத்தலாம். பணம் முழுதும் போய்விடுமோ வென்ற பயம்வேண்டுவதில்லை. உண்மையான சுதேசிய விரதம் அவசியமாகும். தொழில்க

விருத்தியடைவதற்கு எங்கிருந்தும் யாரிடமிருந்தும் உதவியும் ஆலோசனையும் பெறுவதே உண்மைச் சுதேசியமாகும். தாற்காலிதமாகக்கூட பிறருடைய உதவி வேண்டாமென்று சொல்லி வியாபாரம் தொழில் ஸ்தாபனங்களை நடத்தலாமென்று நினைப்பது சுதேசியமாகாது.

மற்றுமொரு துறை

நீங்கள் பிரவர்த்திக்க மற்றுமொரு துறையிருக்கிறது. தேயிலை, காபி. சாகுபடி செய்தால், நல்ல லாபமுண்டாகும். ரப்பர் சாகுபடி நல்ல லாபத்தைத் தரக்கூடியது. வேறு எல்லா விதமான சாகுபடிகளைக்காட்டிலும் ரப்பர் சாகுபடியை நீங்கள் கைப்பற்றலாம். சர்க்கரைத் தொழிலுக்கு வேண்டியளவு உங்கள் ஜில்லாவிலிருக்கிற பனைகளை உபயோகப்படுத்துகிறார்களா வென்பது எனக்குத் தெரியாது. இந்திய கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட சர்க்கரை கமிட்டியின் ரிபோர்ட் இன்னும் வெளியாகவில்லை. அவர்கள் இந்தியாவில் சர்க்கரைத் தொழிலை விருத்திசெய்ய என்ன சிபார்சுகள் செய்திருக்கிறார்களோ?

பிறகு அக்கிராசனர் நாடார் வகுப்பினர் பிற வகுப்பினர்களால் அநீதமாக நடத்தப்படுவது முறையல்லவென்று சொல்லிவிட்டு அவர்களுக்குச் சட்டசபையில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதைப்பற்றிக் குறிப்பிட்டுக் கவர்ன்மெண்டார் தக்கது செய்வரென்று சொன்னார். கடைசியாக நாடார் வகுப்பு பிரமுகர்களில் காலம் சென்ற ஸ்ரீமான் பொன்னுசாமி நாடாரின் அரிய குணத்தைப் பற்றியும், தஞ்சை ராவ்சாகிப் அப்பிரகாம் பண்டிதரின் உதாரகுணத்தைப் பற்றியும் அனுதாபமாகப் பேசினார்.

திவான் வி. பி. மாதவ ராவ்.

சென்றமாதம் 24-ந்தேதி கூடிய பல்லாரிஜில்லா 4-வது மகாநாடு ஹாஸ்பேட்டையில் கூடியது. அப்போது அந்த மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகித்துச் ஸ்ரீமான் ராயர் செய்த பிரசங்கத்தில் முக்கிய விஷயங்களைப்பற்றி அவருடைய அபிப்பிராயம் இன்னதென்பதை நேயர்கள் அறிவார்களாக.

கனவான்களே! இந்தியாவின் சரித்திரத்தில் மிக நெருக்கடியாயுள்ள சமயத்தில் வசிக்கிறோம். நமது தேசத்தின் எதிர்கால நிலை நாம் இப்போது நடந்துகொள்ளும் விதத்தைப்பொருத்திருக்கிறது. கடந்த 35 வருஷங்களாக அதிகாரவர்க்கத்தினரின் கோட்டையைக் கொஞ்சம் பிளவு செய்தோம். அவர்கள் இப்போது அப்பிளவைச் சரிபடுத்திக்கொண்டு முன்னைக்காட்டிலும் தங்கள் நிலைமையை பலப்படுத்தி வருகிறார்கள். இதற்கு உதாரணமாக பார்லிமெண்டில் பஞ்சாப் படுகொலை சம்பந்தமாக நடந்த வாதங்களை கவனியுங்கள். இப்போது அந்த வாதம் இந்திய அதிகாரவர்க்கத்தினர்களுக்குச் சாதகமாக விருக்கிறது. இனி நாமென்ன செய்யவேண்டும்? ஜில்லா கான்பரன்ஸுகள். எங்கும் ஏற்பட்டு நடந்து வருகின்றன. இனி தாலுக்கா கான்பரன்ஸ் தாலுக்கா தலைமை நகரத்தில் ஏற்படவேண்டும். தாலுக்கா கான்பரன்ஸ் ஏற்பட்டாலொழிய ஜனங்கள் நம் தேச நிலையை அறியாது. ஜனங்களின் ஆதரவின்றிக் கான்பரன்ஸ்களினாலும் ஒரு …ன்மையும் உண்டாகாது.

பஞ்சாப் சம்பந்தமாகப் பார்லிமெண்டில் வாதம் ஏற்பட்ட போக்கைப்பார்த்தால், பிரிட்டிஷ் நியாயத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் வெட்கத்துடன் தலைகுனிய வேண்டியிருக்கிறார்கள். இனி பஞ்சாப் சம்பவங்கள் போல் மீண்டும் தேசத்தில் நடைபெறுவென்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது? தேசத்தில் ஒரு புதிய சுதந்தர உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்பதை ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தர்கள் அறியவில்லை. இந்த உணர்ச்சியை அடக்குவதற்கு அவர்கள் மிருக சக்தியைக் கையாளத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

* *

நாம் கேட்பதெல்லாம் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் வித்தியாசங்களொன்றுமிருக்கக் கூடாதென்பதாகும். குற்றவாளிகளை விசாரிப்பதிலும் ஜெயில்களிலும் ரெயில்வேக்களிலும் இந்தியர்களை நிற வித்தியாசம் பாராட்டிப் பட்சபாதமாக நடத்தக்கூடாது. இந்தியர்களின் பிறப்புரிமைகளைப்பற்றி பறி முதல் செய்யக்கூடாது. சீர்திருத்த சட்டம் ஏற்கெனவே உதவாத சட்டமாகும். இப்போது செய்யப்பட்டிருக்கிற சட்ட விதிகள் அச்சட்டத்தை இன்னும் கெடுதியுள்ளதாகச் செய்துவிட்டன. நாம் கிளர்ச்சி செய்ய வேண்டும். ஜனங்களுடைய விருப்பங்களைக் கவர்னர் அலட்சியம் செய்து வந்தால் நாம் ஒத்துழையாமையை அனுசரிக்க வேண்டும். இனி பார்லிமெண்டிற்கு விண்ணப்பம் செய்து கொள்வதில் பயனில்லை. இந்தியா மந்திரி இந்தியாவிலிருக்கும் அதிகார வர்க்கத்தினர்களை ஆதரிக்க வேண்டியவராயிருக்கிறார்.

* *

இந்தியா மந்திரி மிஸ்டர் மாண்டேகு மகாத்மா காந்தியை எச்சரிக்கை செய்வதாகப் பேசினார். ஏற்கெனவே ஆங்கிலோ இந்தியர்கள் மகாத்மா காந்தியின் தலையை வாங்க வேண்டுமென்றிருக்கிறார்கள். மிஸ்டர் மாண்டேகு கூறியதினின்று மகாத்மா காந்தியடிகள்மீது கவர்ன்மெண்டார் ஏதேனும் நடவடிக்கை நடத்துவரென்பது நிச்சயம். ஒருகால் கவர்ன்மெண்டார் காந்தியின்மீது பாய்ந்தார்களானால், பெரிய ஆபத்துண்டாகும். அதிகாரவர்க்கத்தினர்களின் தீச்செயல்களால் தேசம் கொந்தளிப்பாயிருக்கிறது. தேசத்தில் எங்குப் பார்த்தாலும் அமைதியின்மையும் அதிருப்தியு மிருக்கின்றன. வேலை நிறுத்தங்கள் தேச முழுவதும் ஏற்பட்டிருக்கின்றன. ஜலியன் வாலா பாக்கில் குழந்தைகளையும், ஸ்திரீகளையும் நிராயுதபாணிகளான புருஷர்களையும் சுட்டுக் கொன்றதுபோல், வேலை நிறுத்தம் செய்திருப்போர்களைச் சுட்டுவிடக் கூடாது. இந்தியர்கள் கலகம் செய்யமாட்டார்கள். அவர்கள் சத்தியாக்கிரகத்தின் உட்பொருளை இப்போது தான் அறிந்து வருகிறார்கள்.

* *

என்னைப்பற்றிய வரையில் சீர்திருத்த சட்டத்தைக் கண்டித்திருக்கிறேன். என்னுடைய தேசீயக் கட்சி நண்பர்களின் விருப்பத்துக்கிணங்கி நான் இராஜப் பிரதிநிதி சட்ட சபை மெம்பராக நிற்க ஒப்புக் கொண்டேனே யொழிய வேறில்லை. விசேஷ காங்கிரஸ் அரசியல் சம்பந்தமாக எந்த விதமான ஒத்துழையாமை அனுசரிக்கலாமென்பதைப்பற்றித் தீர்மானம் கொடுக்குமென்று நான் உறுதியாக விருக்கிறேன். நான் அறிந்தவரையில் ஒத்துழையாமையைத் தவிர வேறுவழி நமக்கொன்றுமில்லை. பஞ்சாப் படுகொலை சம்பந்தமாகவும், கிலாபத் விஷயமாகவும், சீர்திருத்த சம்பந்தமாகவும் பார்லிமெண்டில் வாதிக்கப்பட்டதினின்று நாம், நம் கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால், ஒத்துழையாமையைக் கட்டாயம் அனுஷ்டிக்க வேண்டும்.

சந்தாதாரர்களே!

சுமார் இரண்டு வருடகாலமாக தமிழ் நாவலர் அ. ரா. மாதவராய முதலியாரால் நடத்தப்பட்டு சன்மார்க்கபோதனை, பழமொழிகள், நாவல்கள், விகடங்கள், இவற்றுடன் வெளிவரும் குணபோதினிஎன்றமாதப்பத்திரிகையைஆயிரக்கணக்கான ஜனங்கள் வாசிக்கின்றனர். நீங்களும் வாசியுங்கள்,

வருடசந்தா ரூபா 1—8—0.

குணபோதினி ஆபீஸ், பெங்களூர். (ச)

என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

நான் ஸ்திரீ புருஷர்களின் உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதம். வாழ்க்கையின் சுகம், காதற்பெருக்கு, பரவச முதிர்ச்சி முதலானதுகளை ஊட்டுகிறவன்.

,, ஸ்திரீ புருஷ லக்ஷணங்களையும், சரீர கோட்பாடுகளையும் விவரித்துக் கூறுபவன்.

அதனால்தான்

சகலதேச வாலிபர்களும், ஸ்திரீகளும், புருஷர்களும் என்னை விரும்புகிறார்கள்,

நான்தான்

ஆநந்தமகிளா.

படங்களுடன் கூடியவன் விலை ரூ 1-0-0

சொற்ப பிரதிகளே கைவசமுள. தாமதிக்காமல் இன்றே எழுதுங்கள்.

விலாஸம்:—

பி. எஸ், ராய், புதுவை.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaiamman koil Street, Tanjore.